**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**

**SINGAMPUNARI**

**DVC. No. 2 /2025 PW 2.**

| | |
|---|---|
| பெயர் : சிவஞானம் | தந்தை/கணவர் பெயர்: பொன்னையா |
| ஊர் : | தாலுகா : |
| வயது : | தொழில் : |
| ஜாதி : | சமயம் : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.01.2026

---

**(மனுதாரர் ஆஜர். எதிர் மனுதாரர் ஆஜரில்லை. எதிர் மனுதாரர் சார்பில் BNSS பிரிவு 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**<u>எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. மனுதாரர் தனது சீர் வரிசைக்களை கொடுக்க கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார். 1ம் மனுதாரர் திருமணம் காலத்தில் மதுரையில் குடியிருந்தார். அவருக்கு மதுரையில் திருமணம் நடந்தது. எந்த இடம் என்று குறிப்பாக ஞாபகமில்லை. 1ம் மனுதாரர் ஒரே சமூகத்தைச் சேர்ந்தவர். திருமண காலத்தில் 1ம் மனுதாரர் குடும்பம் முறையூரில் வசித்தார்களா என்று எனக்கு தெரியாது. திருமண சமயத்தில் எனது முன்னிலையில் 1ம் மனுதாரருக்கு அவரது பெற்றோர்கள் நகை போட்டார்கள். அது என்னென்ன நகைகள் என்ற விவரம் எனக்கு தெரியாது. 1ம் மனுதாரர் தரப்பில் திருமணத்திற்கு பத்திரிக்கை கொடுத்தார்கள் நாங்கள் திருமணத்திற்கு சென்றோம்.

2. 1ம் எதிர்மனுதாரருக்கு நகைபோட்டார்களா என்றால் 1ம் மனுதாரர் ரமாபிரபாவுக்கு போட்டார்கள். 1ம் எதிர்மனுதாரருக்கு போட்டார்கள். 1பவுன் மோதிரம், 1 ½ பவுன் கை செயின், ஒரு வாட்ச் போட்டார்கள். 1ம்எதிர்மனுதாரருக்கு நகை போடவில்லை என்றாலும், நான் திருமணத்திற்கே போகாமல் விவரங்கள் தெரியாமல் 1ம் மனுதாரர் உறவினர் என்பதனால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. திருமணம் முடிந்து திருமணத்தன்று 12.15 மணியளவில் கிளம்பி விட்டேன். நான் திருமண மண்டபத்திலிருந்து கிளம்பும் வரை பெண் மாப்பிள்ளை அங்கு இருந்ததார்களா என்றால் தெரியாது.

3. எதிர் மனுதாரர் வீட்டிற்கு சீர்வரிசை சென்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. திருமணத்திற்கு பின்னர் 1ம் மனுதாரர், 1ம் எதிர் மனுதாரர் 3 ½ வருடம் கல்கத்தாவில் குடியிருந்தார்கள். அவர்கள் எத்தனை வருடம் 1ம் எதிர் மனுதாரர் வீட்டில் வாழ்ந்தார்கள் என்று எனக்கு தெரியாது. 2ம் எதிர் மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரின் தங்கை ஆவார். 2ம் எதிர்மனுதாரரை 1ம் மனுதாரரின் அண்ணனுக்கு திருமணம் செய்துக் கொடுத்தார்கள் என்றால் சரிதான். 1ம் மனுதாரரின் அண்ணன் ரமேஷ் அவரது வீட்டின் ஒரே ஆண் வாரிசு ஆவார்.

தற்போது ரமேஷ் இறந்து விட்டார். ரமேஷ்க்கும், 2ம் எதிர்மனுதாரருக்கும் 2 ஆண்பிள்ளைகள் உள்ளனர். ரமேஷ் உயிருடன் இருந்தபோதே கூரைவீட்டை இடித்து விட்டு தார்ச் வீடு கட்டினார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

4. 1ம் மனுதாரர் முறையூரிலுள்ள பூர்வீக தார்சு வீட்டில் குடியிருக்கிறார். மேற்படி வீட்டின் மாடி பகுதியில் வாடகைக்கு 1ம் மனுதாரர் விட்டார என்றால் தெரியாது. மேற்படி வீட்டை 1ம் மனுதாரருக்கு அவரது அப்பா தானசெட்டில்மெண்ட் கொடுத்தார் என்றால் சரிதான். 1ம் மனுதாரர், 2ம் எதிர்மனுதாரரையும் அவரது பிள்ளைகளையும் வீட்டைவிட்டு அடித்து விரட்டி விட்டார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. 1ம் மனுதாரருக்கும், 1ம் எதிர் மனுதாரருக்கும் தகராறு அடிக்கடி வரும். அப்போதெல்லாம் நாங்கள் சமதானம் படுத்தி அனுப்போம். 1ம் எதிர்மனுதாரர் மாதவராயன் பட்டியில் குடியிருக்கவில்லை என்றாலும், பிறந்தலிருந்து கல்கத்தாவில் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல.

5. 2ம் எதிர்மனுதாரின் கணவர் இறப்பதற்கு முன்பே மதுரையிலுள்ள வீட்டை1ம் மனுதாரருடைய தகப்பனார் ராஜபாண்டி தனது மகன் ரமேஷ்க்கு தெரியாமல், அவருடைய மூத்த மகளுக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்த விவரம் எனக்கு தெரியாது. மேற்படி ஆவணம் செல்லாது என்று 2ம் எதிர்மனுதாரர் வழக்குபோட்ட விவரம் எனக்கு தெரியாது. மேற்படி வழக்கே வாபஸ் வாங்கச் சொல்லி 1ம் மனுதாரர் மற்றும் அவரது தகப்பனார் மிரட்டிருந்தார்கள் என்றாலும் வாபஸ் வாங்காததால் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், 1ம் மனுதாரரின் தகப்பனார் தூண்டுதலின் பெயரில் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் மனுதாரர் கஷ்ட ஜீவனம் நடத்தவில்லை என்றாலும் வீடே வாடகைக்கு விட்டு வசதியுடன் இருக்கிறார் என்றால் சரியல்ல.